# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா கடந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் விருந்தினர்கள் கௌரவிப்பு!





வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடாவின் 2017-18ம் நிர்வாக ஆண்டிற்கான மூன்றாவது நிர்வாக சபைக்கூட்டம் 24-09-2017 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் நிர்வாகசபை உறுப்பினர் வைத்தியக்கலாநிதி பொன்னம்பலம் பாலசுந்தரம் அவர்களது அலுவலகத்தில் தலைவர் திரு சி. இளஞ்செழியன் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குச் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த பழைய மாணவர்கள் திரு வேலுப்பிள்ளை பொன்னையா மாணிக்க வாசகர் (இளைப்பாறிய தொழில்நுட்பத் துறை உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் பழைய மாணவர் சங்கம்-கொழும்பு) வைத்தியக் கலாநிதி நாகரட்ணம் யோகநாதன் (புற்றுநோய் சிகிச்சை நிபுணர் கண்டி மாவட்ட வைத்தியசாலை) அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் சிறப்பான நீண்ட கால செயற்திட்டங்களையும் நிர்வாகத் திறனையும் கல்லூரி மற்றும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சி மீது கொண்டுள்ள அக்கறையையும் தொழில்நுட்ப முறையிலான மின்னஞ்சல் பத்திரிகை முகநூல் மூலமான சிறந்த முறையிலான தகவல் தொடர் பாடல்களையும் பாராட்டியதோடு சங்க நிர்வாகமானது விருந்தினர்களை வரவேற்கும் முறையில் சிறந்த கலாச்சாரத்தைப் பின்பற்றுவதாகவும் கூறினர். நிறைவாக நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்ட மதிய விருந்துபசாரத்திலும் பங்குபற்றி மகிழ்ந்தனர். குறுகிய கால விடுமுறையில் வருகை தந்திருந்த விருந்தினர்கள் இருவரும் தங்கள் நேர வசதியின்மையைக் கருத்திற் கொள்ளாது எமது அழைப்பை ஏற்று குறித்த நேரத்துக்குச் சமூகமளித்தமைக்குச் சங்கத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகள் உருத்தாகட்டும்.

***சி. இளஞ்செழியன் (தலைவர்)***

***வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா***

